


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் 42 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 14 விளையாட்டுத் துறை கட்டடங்களை திறந்து வைத்து, 37 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.3.2026) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில், தமிழ்நாட்டில் வனங்கள் மற்றும் மரங்களால் சூழப்பட்டுள்ள பரப்பினை 33 சதவீதமாக மாற்றும் குறிக்கோளினை அடையும் வகையில் 'தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கை 2026' வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா. சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை மாவட்டம் இலுப்பைக்குடி சிப்காட்டில்

# ரூ.5300 கோடியில் எம்.ஆர்.எப். டயர் உற்பத்தி ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை, மார்ச் 6 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (4.03.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், MRF நிறுவனம், 5**300 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 1000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு** அளிக்கும் வகையில்,சிவகங்கை மாவட்டம்,சிப்காட் - இலுப்பைக்குடி தொழிற் பூங்காவில் புதிய டயர் உற்பத்தி ஆலை அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026-யை வெளியிட்டார்.

தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும், பல்வேறு துறைகளில் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணி மாநிலமாகவும் விளங்கி வருகிறது. சீரான, பரவலான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதை நோக்கமாகக்கொண்டு முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்தியாவிலேயே, இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாகவும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

**MRF நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

MRF நிறுவனம், டயர்கள், டியூப்கள் மற்றும் பாதுகாப்புப் பட்டைகள் (Flaps) ஆகியவற்றைத் தயாரித்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் விநியோகம் செய்து வரும் பாரம்பரியம் மிக்க நிறுவனமாகும். இந்நிறுவனம், இந்தியாவில் 10 இடங்களில் தனது ஆலைகளை நிறுவியிருந்தாலும், தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில், அதாவது திருவொற்றியூர், அரக்கோணம் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் தனது உற்பத்தி ஆலைகளைக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது

MRF நிறுவனம், தனது வணிகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில், அடுத்த 12 ஆண்டுகளில், 5300 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 1000 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிவகங்கை மாவட்டம், சிப்காட் இலுப்பைக்குடி தொழிற் பூங்காவில் ஒரு புதிய அதிநவீன டயர் உற்பத்தி ஆலை அமைக்க திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொளப்பட்டது.

**தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026 வெளியீடு**

தமிழ்நாட்டை நிலைத்த மற்றும் தொழிற்நுட்ப ரீதியாக மேம்பட்ட கப்பல் கட்டுமானத்தில் உலகளவில் முன்னணி மாநிலமாக நிலைநிறுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026 வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் வெளியிடப்பட்டது.

கப்பல் கட்டுமானம், வடிவமைப்பு, பழுது பார்த்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, திறன் மேம்பாடு ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் முழுமையான கடல்சார் தொழில் சூழலை உருவாக்குவது இக்கொள்கையின் பிரதான நோக்கமாகும்.

கப்பல் கட்டுமானத் தளம் (Shipyard), பசுமை கப்பல் மறுசுழற்சி (Green Ship Recycling) மற்றும் கப்பல் உதிரிபாகங்கள் உற்பத்தி போன்ற துறைகளில் (Marine Component Manufacturing) முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், இக்கொள்கை விரிவான ஊக்குவிப்பு கட்டமைப்பை வழங்குகிறது. முதலீட்டில் பங்களிப்பு (equity participation), சொத்து குத்தகை (asset leasing), மூலதன மானியம் (Capital Subsidy) மற்றும் உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகைகள் (Productionlinked Incentives) ஆகியவற்றைக் கொண்ட அமைப்புமுறையிலான ஊக்கத் தொகுப்பு (Structured Package of Assistance) வழங்கப்படும். மேலும், சர்வதேச சுற்றுச்சூழல் ஒப்பந்தங்களுக்கு இணங்கச் செயல்படும் சான்றளிக்கப்பட்ட மறுசுழற்சி நிலையங்களுக்கு மூலதன மானியம் வழங்கப்படும். கப்பல் உபபாகங்கள் உற்பத்தித் துறைக்கு, வளர்ந்துவரும் துறைக்கான (Sunrise Sector) சிறப்பு அங்கீகாரம் வழங்கி, தமிழ்நாடு தொழில் கொள்கை 2021ன்கீழ் ஊக்கச்சலுகைகள் வழங்கப்படும்.

SIPCOT மற்றும் வ.ஊ.சி துறைமுகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து, NSHIPTN என்ற சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) அமைத்தல், ஒற்றைச் சாளர இணையதளம் மூலம் அனுமதி (singlewindow project facilitation) மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்துடன் (Indian Maritime University IMU) ஒருங்கிணைந்து இத்துறைக்குத் தேவையான சிறப்பு படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs), பல்தொழிற்நுட்ப கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மாநில பல்கலைக்கழகங்களின் ஒருங்கிணைப்புடன் பல்நிலை திறன் மேம்பாட்டு அமைப்பு போன்ற நிறுவன ஆதரவுகள் மூலம் இத்துறை வலுப்படுத்தப்படும். இதன்மூலம் உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாகி, கடற்கரைப் பகுதிகளின் வாழ்வாதாரம் மேம்பட்டு, நீல பொருளாதாரத்தில் உலகளவில் முன்னணி மையமாக தமிழ்நாடு உருவெடுக்கும் வகையில் இந்த தமிழ்நாடு கப்பல் கட்டுமானக் கொள்கை 2026 வெளியிடப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்களும், MRF நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.எம். மாம்மன், துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அருண் மாம்மன், மேலாண்மை இயக்குநர் ராகுல் மாம்மன் மாப்பிள்ளை, துணைத் தலைவர் மற்றும் இணை நிறுவன செயலர் டி.வி. துளசிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டம், உதகை ரேஸ்கோர்ஸ் பகுதியில்

# ரூ.70.23 கோடி மதிப்பில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) திட்ட பணி!

## அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்!

நீலகிரி, மார்ச் 6 -

நீலகிரி மாவட்டம், உதகை ரேஸ்கோர்ஸ் பகுதியில் ரூ.70.23 கோடி மதிப்பில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) திட்ட பணிகளுக்கு, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி, பணிகளை 4.3.2026 அன்று தொடங்கி வைத்தார்.

பின்னர் அரசு தலைமை கொறடா அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில், இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் அறிவிப்பின்படி ( ( SASCI ) ) மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவி திட்டம் 20242025 உதகை ரேஸ்கோர்ஸ் பகுதியில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) ரூ.70.23 கோடி மதிப்பீட்டில் பணிகளை செயல்படுத்த திட்டமிட்டு முதல் கட்டமாக ரூ.12.33 கோடி மதிப்பில்; பல்வேறு பணிகள் மேற்கொள்ளும் வகையில் இன்றைய தினம் அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டப்பணிகள் தொடங்கப்பட்ட பிறகு படிப்படியாக அடுத்த கட்டப்பணிகள் நடைபெற்று விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தில் குளங்கள் அமைக்கப்பட்டு, அதனுள் பூர்வீகத் தாவரங்களுடன் கூடிய சுத்திகரிப்பு திட்டுகளும், மிதிவண்டிப்பாதை, நடைபாதை விழிப்புணர்வு கண்காட்சிக் கூடம், கேளிக்கை அரங்கம் மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகியன அமைக்கப்பட உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சதுப்பு நில பராமரிப்பு மற்றும் பூர்வீகத் தாவர பராமரிப்பு ஆகியவை இத்திட்டத்தில் கருப்பொருளாக முன்னிருத்த செயல்படுத்தப்படும்;. மேலும், கோடை காலம் மற்றும் விடுமுறை காலங்களில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள் மற்றும் புகைப்பட ஆர்வலர்கள் பெருமளவில் அதிகரித்து உள்ளூர் பொருளாதாரம் மேம்படும்.

இயற்கையுடன் இணைந்து அமைதியான நேரத்தை களிக்க விரும்புவோர் அனைவரும் உதகை சுற்றுச்சூழல் பூங்கா சிறந்த தேர்வாக விளங்கும் என அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மண்டல மேலாளர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் யுவராஜ், உதவி செயற்பொறியாளர் குண சேகரன், உதகை நகர்மன்ற தலைவர் திருமதி வாணீஸ்வரி, உதகை நகர்மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் சங்கர், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், உதகை ரேஸ்கோர்ஸ் பகுதியில் ரூ.70.23 கோடி மதிப்பில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) திட்ட பணிகளுக்கு தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் 04.03.2026 அன்று அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், மண்டல மேலாளர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் யுவராஜ், நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம்,ராஜு, உதகை நகர்மன்ற தலைவர் திருமதி வாணீஸ்வரி, துணைத்தலைவர் ரவிக்குமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் சங்கர் மற்றும் மாவட்ட அவைத்தலைவர் போஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மயில்,பொருளாளர் நாசர் ஹலி,உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## மதுரை – நெல்லை தூத்துக்குடி தென்மண்டல

# தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

மதுரை, நெல்லை, தூத்துக்குடி தென்மண்டல தி.மு.க. பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (06.03.2026 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு, ABM Hotel & Resort, தேனியில் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில், பொறியாளர் அணித் தலைவர் துரை.கி.சரவணன், பொறியாளர் அணியின் மதுரை மண்டல பொறுப்பாளர் கலை.கார்த்திகேயன், நெல்லை மண்டல பொறுப்பாளர் ராஜவர்மன், தூத்துக்குடி மண்டல பொறுப்பாளர் பா.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

மதுரை, நெல்லை, தூத்துக்குடி மண்டலத்துக்கு உட்பட்ட தென் மண்டல பொறியாளர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர்கள் , தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் அவசியம் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: திருச்சியில் 09.03.2026 அன்று நடைப்பெற உள்ள கழக நிர்வாகிகள் மாநாடு வருகைக்காக.

**எஸ்.கே.பி.கருணா**
செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி



காங்கேயம் நெடுஞ்சாலைத்துறை அலுவலக வளாகத்தில் பொதுப்பணித் துறையின் சார்பில் ரூ.83.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காங்கேயம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.இ.பிரகாஷ் (ஈரோடு), கே.சுப்பராயன் (திருப்பூர்), க. ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.